# நற்றமிழ்க்குடில்

## தமிழால் தழைக்கும் உலகு

மாணவ இலக்கிய மின்னிதழ்

டிசம்பர் 2022



குடில் 5
விருந்து 15

## தமிழ்த்துறை

சோகா தமிழ்ப் பேரவை வெளியீடு


சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி

சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.


நற்றமிழ்க்குடில்

# நற்றமிழ்க்குடில்

தமிழால் தழைக்கும் உலகு

**மாணவ இலக்கிய மின்னிதழ்**


## குடில் 5 விருந்து 15

## டிசம்பர் 2022


## தமிழ்த்துறை


**சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு**

**சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி**

**சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.**

# நற்றமிழ்க்குடில்


| | | |
|---|---|---|
| ஆசிரியர் குழு | : | ரா. பிரியதர்ஷினி, இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு |
| | | பா. பவித்ரா, இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு |
| | | மோ. ஐஸ்வரியா, முதுகலைத்தமிழ், முதலாமாண்டு |
| | | வி. மாரிகவிதா, இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு |
| | | து. லீலாவதி, இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு |
| ஆலோசனைக் குழு | : | டாக்டர் சேது குமணன், கல்லூரித் தலைவர் |
| | | முனைவர் மீரா முருகேசன், கல்லூரி முதல்வர் |
| | | முனைவர் கண்மணி சுப்பிரமணியன், கல்லூரித் துணை முதல்வர் |
| | | முனைவர் தே. இராணி எலிசபெத், தமிழ்த்துறைத் தலைவர் |
| | | தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் |
| வெளியீடு | : | தமிழ்த்துறை |
| | | சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு |
| | | சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி |
| | | சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099. |



| | | |
|---|---|---|
| **Blog** | : | **sokatamil blogspot.com** |
| **Facebook** | : | **Soka Tamil Avai** |
| **Youtube** | : | **Sokatamilavai** |
| **E.mail** | : | **sokatamilavai2023@gmail.com** |

# நற்றமிழ்க்குடில்

## தமிழால் தழைக்கும் உலகு

### மாணவ இலக்கிய மின்னிதழ்

### குடில் 5

### விருந்து 15

### டிசம்பர் 2022

# உள்ளே....

## பாரதியார் பிறந்த நாள் விழாச் சிறப்பிதழ்

## (மாணவர் கவிதைத் தொகுப்பு)

- மாணவர் கவிதைகள்
- தமிழ்த்துறை நிகழ்வுகள்

# பாரதியார் பிறந்த நாள் விழாச் சிறப்பிதழ்
# மாணவர் கவிதைத் தொகுப்பு

மகாகவி பாரதியின் பிறந்த நாளை முன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும், சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரித் தமிழ்த்துறையில் போட்டிகளும் தொடர்ந்து விழாவும் நடத்தப்பெற்று வருகின்றது. அவ்வகையில் இவ்வாண்டு, 07.12.2022 அன்று கல்லூரிகளுக்கு இடையே பாட்டு, பேச்சு, கவிதை மற்றும் வினாடி வினாத் தேர்வுப் போட்டிகள் இணையவழியில் நடத்தப்பெற்றன.

போட்டிகளில் ஐம்பதிற்கும் மேற்பட்ட முந்நூறு கல்லூரி மாணவர்கள் பங்குபெற்றனர். தமிழ்க் கற்றோர் தரணி போற்றும் திறனுடையோர் என்பது அவர்களின் பங்களிப்பில் உணர்த்தப்பட்டது. மாணவர்கள் பங்குபெற்ற அனைத்துப் படைப்புகளையும் காட்சிப்படுத்த வேண்டும் என்ற அவா இருப்பினும், அவற்றை முழுமையாகக் கொடுக்க இயலாத காரணத்தினால், கவிதைப் போட்டியில் பரிசுப்பெற்ற மற்றும் பங்கு பெற்ற மாணவர்களின் கவிதைகள் இவ்விதழில் இடம்பெறுகின்றன.

## மகாகவி பாரதி

அகிலம் போற்றும் கவிஞராம் – அவர்
அன்னைத் தமிழின் புலவராம்
ஆழ்கடல் தமிழின் முத்தெடுத்தே – புதிய
ஆத்திச்சூடித் தந்தவராம்
இன்பத்திற்காகவே பெண்களென்றோரின்
இமையைப் பிடுங்கி விட்டவராம்
ஈதை வாழ்வில் வந்தாலும்
ஈசன் வழியில் நின்றவராம்
கன்னித்தமிழின் பொட்டு – அவர்
கவிதைப் பாடும் சிட்டு!
காக்கை குருவி எங்கள் சாதியென – நம்
காதுகளில் சொன்ன மெட்டு!
கிழவன் பருவம் வந்தாலும் – தான்
கிளர்ச்சி செய்வேன் என்றவராம்
கீழ் மேல் என்ற பிரிவுகளை – கவிதையால்
கீறி கீழே எறிந்தவராம்.
சாவதற்கு அஞ்சேல் என்றவராம் – அவர்
செந்தமிழ் உலகில் மன்னவராம்

சாதிகள் இல்லையென்று
சொன்னவராம் - அவர்
சாகும்வரை தமிழில் வல்லவராம்
சிந்துக்குத் தந்தை ஆனவராம் – தன்
சிந்தையில் விடுதலை ஊறிப்போனவராம்
புதுக்கவிதைக்கு வழி காட்டியவராம் – அவர்
புரட்சி விடுதலைத்தீ மூட்டியவராம்
கண்ணனைக் கொஞ்சிய காதலன் – அவர்
கனத்த தமிழில் கவிப்படைக்கும் பாவலன்
குயில் பாட்டு பாடிய கவிஞன்
விடுதலை வேண்டும் என்று – ஆறாம்
விரலால் எழுதினான் அன்று
செந்தமிழ் மொழியைக் கண்ட – அவர்
செய்தாரே நல்ல தமிழ்த் தொண்டு
காடு கமழும் கற்பூரச் சொற்கோ
என்றார் அவரைப் புரட்சிக்கவி
பாட்டுக்குள்ளே புதுமைக்கொண்டு
பாடியதால் அவர் புதுமைக்கவி
நாட்டுள்ளே விடுதலை வாசம் வேண்டி

பாட்டிசைத்ததால் அவர் உரிமைக்கவி
மெட்டுக்குள்ளே அதுக்கு மெத்தையமைத்து
கட்டிப்போட்டதால் அவர் உணர்ச்சிக்கவி
தமிழுக்கு அவன் கதி
அவனுக்குக் கதி கவி
பாட்டுக்கு அவன் வரி – அவன்
பார்போற்றும் பாரதி!! மகாகவி பாரதி!!!

இ. முகில் வேந்தன், இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு
இலயோலா கல்லூரி, சென்னை.

## மகாகவி பாரதி

எட்டயபுரத்தவர் எட்டிய உயரம் என்
மூவெட்டு வரிகளில் எட்டுமோ?
பாவின் மன்னவனோ?
பா ரதியின் மன்மதனோ?
படைத்தாளுமை சுடர்மிகும்
அறிவோடு - சிவசக்தி
நீரோ படைத்தாயே!
நடைமிகும் செறிவோடு

புல்லாங்குழலவனை
மயக்கும் பாவையே
கண்ணனும் மயங்கி பாவையாக
உம் கண்ணம்மாவாக...
வல்லாதிக்க வரிகளுக்கு
பாரதம் நடுங்க,
உமது வரிச்சக்கரங்கள் பா ரதம் செலுத்த
நாளேடுகளே ஓடும் குதிரைகளாக
நடுங்கியதே வல்லாதிக்கமும்
நீரெங்கும் காணாத இன்மொழியும்
மீண்டும் உமைக் காண அழைக்குதே
உமையவளிடம் வரம்பெற்று
இவ்வுலகம் வாராயோ?
புகழுவமை நிரம்பிய
புதுக்கவிதை தாராயோ?
பதுமையெனும் பதம் தவிர்த்த
புதுமைப்பெண் காண வாராயோ?

ச. குரு பிரசாத், இளங்கலை ஆங்கில இலக்கியம்
இரண்டாமாண்டு, அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

## முண்டாசுக் கவிஞன்...

மீசையில் மிரட்டும் வீர மகன்...
ஆசையாகப் படிக்கத் தூண்டும்
வரிகளை அமைப்பின்...
எட்டயபுரத்து தங்க இளவரசன்...
எட்டினாலும் கிட்டாது இவன் புதியவன்...
சுப்பையாவாக இருந்து...
சுற்றி திரிந்து அறிவினை வளர்த்து...
பாரதியாகப் பெயர் பெற்றவன்...
பாராளும் வலிமை பெற்று...
விடுதலைக்குப் பாடுபட்டவன்...
விஞ்ஞானம் அறிந்த கரம் பெற்றவன்...
எந்நாளும் பாடுபட்டு...
என்னவென்று தெரியாமல்
இருந்தோரைக் காத்த முண்டாசு அணிந்த கவிஞன்...
முத்தான வரிகளுக்குச் சொந்தக்காரன்...
கள்ளம் கபடம் இல்லா மனிதன்...
கள்ளைத் தடுக்கவும் பாடுபட்டான்...
சொல்லால் உணரப்படாத ஊழலை...

உணரச் செய்த உத்தமன்…
பெண்களை மதித்தே உயர்ந்தவன்…
பெண் விடுதலைக்குப் பாடுபட்டவன்…
ஈட்டிப் பிடித்துச் சண்டை போடாமல்…
ஈரமான எழுதுகோளின் மையினால் சண்டை போட்டவன்…
சிறைச்சாலை சென்று வந்தவன்…
சிறு தவறையும் ஏற்க்காத முதல்வன்…
வருமையை முற்றிலும் உணர்ந்தவன்…
கருமை நிற உடுப்புகாரன்…
திறமையாகத் திகழ்ந்து வந்தவன்…
திட்டாது கொட்டாது தன்னையே உணர்ந்தவன்…
எந்த உயிர்க்கும் தீங்கு நினையாதவன்…
எந்தன் உயிர் மாய வாயில்லா உயிரினாலே
இயலுமென செத்து மடிந்தவன்…
புதுமை பெண்களின் தலைவன்…
இவனே நான் அறிந்த உத்தமன்…

க. கௌசிகா, இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு
பாரதியார் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
தேவியாக்குறிச்சி.

## மகாகவி பாரதி

மண்ணிலே பலர் மறைந்தாலும்
நம் உள்ளத்திலே மறையாமல்
வாழ்பவர்கள் ஒரு சிலரே
அதில் ஒருவர் தான் நம் பாரதியார்
எட்டயபுரத்தில் பிறந்து
எட்டா கனியாக வளர்ந்து
எட்டுத்திக்கும் தமிழன் புகழை
தன்னுடைய கவிதையால் வர்ணித்தவர்
தமிழே என் மூச்சு
தமிழே என் பேச்சு என்று
தமிழின் புகழை அழகிய வடிவமாக
சீர் அமைத்தவர் நம் கவிஞர்

சமுதாயத்தில் நடக்கும் அநீதிகளைக் கண்டு
அஞ்சி நடுங்காமல் தன் பேனா நுனியால்
பல போர்களை மேற்கொண்டவர்
சக மனிதர்களையும் சமமாக மதித்தவர்

பெண் விடுதலைக்காகக் குரல் கொடுத்தவர்
பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் என்று
பெண்மையின் மகத்துவத்தையும்
மாண்பையும் உயர்த்தியவர்

தீண்டாமை எனும் நோயை
தீயில் இட்டு நசுக்கியவர்
தன் திறமையைக் கொண்டு
தாழ்ந்தோரை உயர்த்தியவர்

இப்படிப்பட்ட கவிஞரை நாம் போற்றுவோம்
காலம் மாறினாலும் நேரம் மாறினாலும்
இவர் மறைந்தாலும் இவர்
வாழ்க்கை வரலாறு மறையாது
இவரைப் போல் வாழவிட்டாலும்
இவரின் பண்பைக் கொண்டு வாழ்வோம்!

வே. மார்த்தாள், இளங்கலைச் சமூகவியல் மூன்றாமாண்டு
பெட்ரிசியன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அடையாறு.

## மகாகவி பாரதி

வட - தென்கோடி இணைக்கும்
கவி பாடி அழைத்த
ஒரு சுதந்திரப் பள்ளு…
முப்பது கோடியும்
முழுமைக்கும் ஏற்கும்
அவன் சிந்தனைகள்
இப்போதும் பொருந்தும்
இந்தியாவிற்கு!

மரபுகளை உடைத்தெறிந்த
புதுக்கவிதைகளின் புதல்வன்!
மண் விடுதலை
பெண் விடுதலை
மனித விடுதலை
எல்லாம் பாடிய
மாபெரும் விடுதலை அவன்!

மண்ணில் புதைய வேண்டிய
பழமைவாதம்
மண்மூடச் செய்ய எழுதியது
அவன் பேனா!
பெண்ணுக்கு மட்டும் அல்ல
கற்பு
ஆணுக்கும் பொதுவில்
நிறுத்தியது
அவன் கோபம்!

காணி நிலம் கேட்டான்
தந்தால் பராசக்தி
ஆனந்த சுதந்திரம்
அப்போதே கேட்டான்…
அதையும் தந்தால்
தாமறிந்த தமிழை
உவகை செய்தான்
உச்சி முகத்தால் பராசக்தி!
வெள்ளை நிறத்தொரு பூனை

அவன் வீட்டில் வளர்வதை
எண்ணாத பராசக்தி
ஏனோ பாரதியைப்
பாதியிலேயே அழைத்துக்
கொண்டாள்
அவனோ வீழாது வாழுகிறான்
மகா கவியாய்!

சு.பெ. தமிழமுதன்
ஸ்ரீ வெங்கடேஸ்வரா சட்டக் கல்லூரி, திருப்பதி.

## எட்டயபுரச் சிங்கம்

எட்டயபுரத்துச் சிங்கமே
எரிமலை எனக் கொதித்திடும் சிங்கமே
கண்ணன் பாட்டும், குயில்பாட்டும்
கவிப்பேரரசனின் கவிதைகளே

சாதி மதங்களைச் சாடியவர்
சாட்டையாய் வரிகளைச் சுழற்றியவர்
முறுக்கு மீசை முகத்தினிலே
முண்டாசுக் கவி எங்கள் பாரதியே…

பெண்ணியம் பேசிடும் பன்முகமே - உன்னால்
பெருமிதம் கொள்ளுவது தமிழினமே

மண்ணில் கிடக்கும் புழுவல்ல - இவர்
மதில் என உயர்ந்த கோபுரமே!
சுதேசிமித்திரனில் தொடங்கிய பணி
சுதந்திரப் பாரதம் இவருக்குக் கனி!
எனக்குத் தொழில் கவிதை என்றாய்
எண்ணத்தில் கண்ணம்மாவைக் காதலித்தாய்…
நல்லதொரு வீணை செய்தே - அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
சொல்லடி சிவசக்தி என்றாய்…
சொல்லாலே புத்துணர்ச்சி தந்தாய்
சிந்தனை துளிகளைச் சிதறவிட்டாய்
சிறைபட்ட மனங்களுக்குச் சிறகுகள் தந்தாய்

வாழிய எங்கள் சுடர் விளக்கே - உன்னை
வாழ்த்திடும் பெருமையில் தமிழினமே

ப. அஸ்வத், பொருளாதாரம் மூன்றாமாண்டு
தெ.தி.இந்து கல்லூரி, நாகர்கோயில்.

## மகாகவி பாரதியார்

எட்டயபுரம் கண்ட முன்னறி புலவன்
சின்னசாமி ஈன்ற நற்கவி வளவன் – இவன்
அறத்தைப் பாடிய பைந்தமிழ் தேர்பாகன்
முண்டாசுக் கட்டிய முத்தமிழ் முப்பாட்டன்!

புதுக்கவிதை முன்னோடியாம் எங்கள் ஞானி
அதனாலே அழைக்கப்பட்டார்
செந்தமிழ்த் தேனீ – தமிழ்
மணம் வீசுகின்ற அழகிய மேனி
தமிழ் தாகத்தைத் தீர்க்கின்ற வற்றாக் கேணி!

சுதந்திரத்தை விதைத்திட்ட
விடுதலைக் கவியே!
அகிலத்தை வியக்கவைத்த
உலகக் கவியே – உன்னை
பாட்டுக்கொரு புலவன் என்றான் அறிஞன்!
நீதியை உரைத்திட்ட உண்மைக் கவிஞன்!

பாப்பாவுக்குப் பாட்டெழுதிய

குழந்தைக் கவிஞன்
கண்ணனுக்குக் கவிக்கொடுத்த
தெய்வக் கவிஞன் - நீயோ
பாஞ்சாலி சபதத்தின் உரிமைக் கவிஞன்
புதியதொரு உலகினில் உணர்ச்சிக் கவிஞன்!

கண்ணம்மாவின் காதலி அமரக் கவியே!
தமிழ்க்கூறும் பாவலனே காதற் கவியே!
கொடுமையை உரைத்திட்ட
கண்டனக் கவியே!
எங்கள் மனதினில் நிலைத்திட்ட மகாகவியே!

கவிதையொன்று எழுதினேன் உனக்கு
கவியே பக்கங்கள் போதவில்லை எனக்கு
உன் புகழ் பேசும் பொழுதுகள் எல்லாமே
என் காதோரம் உன்குரல் கேட்கிறதே!

அ. பெர்த்தி வினித், இளங்கலைத்தமிழ் இரண்டாமாண்டு
இலயோலா கல்லூரி, சென்னை.

## மகாகவி பாரதியார்

எட்டயபுரம் கண்டெடுத்த கட்டிக்கரும்பு
எட்டாத உயரங்கள் முட்டும்
பாரதியின் கவிகள்
பதினெட்டாம் நூற்றாண்டு
நமக்கு அளித்த அற்புதம் தான்
நம் மகாகவி

எட்டாம் பிராயத்தில் கவிபாடும் ஆற்றல்
அவரை அடையாளம் காட்டியது பாரதியாக
மண்ணில் தோன்றிய அனைவரும்
மாபெரும் செயல்கள் செய்ததில்லை
மகத்தான சாதனைகள் புரிவதில்லை

சிலசமயம் அசாத்திய சாதனைகளே
மனிதர்களாகத் தோன்றுவதுண்டு
கண்முன் தோன்றும் சிற்பங்கள்
உளிகள் தாங்கியவை
கண்ணீர் கடந்த அற்புதங்கள்

வலிகள் தாங்கியவை
பாதகம் செய்பவரைக் கண்டால்
பயங்கொள்ளாதே பாப்பாவென
சிறு குழந்தையிடமிருந்து தொடங்குகிறது
வீர போதனைகள்
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லாதிருக்க ரௌத்திரம் பழக்கி
மீசை முறுக்கினார்

வளத்தினில் ஏழையானாலும்
வாக்கினில் குபேரனாம்
வாளைவிடக் கூர்மையான எழுதுகோல்
ஏந்தினார் நம் தேசியக் கவி
உயிர்கொடுத்தன உயிர்ப்புள்ள கவிதைகள்
உறைந்துவிட்ட நம்பிக்கையின்
கடைசி துளிகளுக்கு

சிரம்கொண்ட முண்டாசும்
முறுக்கிய மீசையும் வெறும்

அடையாளங்கள் அல்ல
அவை அடுத்த நூற்றாண்டும்
தொடர்ந்து வரும்
சரித்திரம் பேசும் அத்தியாயங்கள்

பு. கீர்த்தனா, முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு
பாரதியார் பல்கலைக்கழகம் முதுகலைப் பட்ட மேற்படிப்பு
விரிவாக்கம் மற்றும் ஆராய்ச்சிமையம், பெருந்துறை.

## நான் ரசித்த பாரதி

நீர் எதைத்தான் போற்றவில்லை?
வீரத்தைப் போற்றிய நின் விரல்கள்
காதலைப் போற்றவும் மறக்கவில்லை!
காதலைப் போற்றிய நின் விரல்கள்
ரௌத்திரத்தைப் போற்றவும் மறக்கவில்லை!
ரௌத்திரத்தைப் போற்றிய நின் விரல்கள்
காவியத்தைப் போற்றவும் மறக்கவில்லை
காவியத்தைப் போற்றிய நின் விரல்கள்
மகளிரைப் போற்றவும் மறக்கவில்லை!
மகளிரைப் போற்றிய நின் விரல்கள்

மாசற்ற தமிழைப் போற்றவும் மறக்கவில்லை!

தேடுகிறேன்...

தரணியிலே நீர் தவறவிட்டதென்று எதுவுமில்லை

பண்புகள் பல நிறைந்தவனே

நின் சிந்தையைச் செதுக்கிய

சிற்பிதான் யாரோ?

பாரதி...

ஐந்து வயதில் கண்டேன்

ஓடி விளையாடு என்றாய்!

பதினாறு வயதில் கண்டேன்

நின்றென் காதலை எண்ணிக் களிக்கின்றேன்

என என்னை மயக்கினாய்!

இருபது வயதில் கண்டேன்

ரௌத்திரம் பழகு என என்னைச் செதுக்கினாய்!

இருபத்தைந்தில் கண்டேன்

நமது நெஞ்சிலே மின்னல்

விசிரிப் பாய்க என

என்னை ஊக்குவித்தாய்!

முப்பதில் கண்டேன்
செம்மை மாதர் திறம்புவதில்லையாம் என
என்னைப் புதுமை பெண்ணாக்கினாய்!
நின்னைக் கண்டு நின் மொழியைச்
செவிமடுத்து வளர்ந்தவள் நான்
நரைக் கூடி கிழப்பருவம் எய்தி
வேடிக்கை மனிதரைப் போல்
நான் என்றும் வீழேன்...

தா. ஜாக்குலின் பாய் ரம்யா
இளங்கலை ஆங்கிலம் இரண்டாமாண்டு
பி. எஸ்.ஜி. கலை அறிவில் கல்லூரி

## பாரதியாரின் கவிதைகள்

நான் எதிர் நீ புதிர்
திராவிட நாட்டில்
ஆளப் பிறந்தவனே!
பாரதத்தாயின் அவதாரமே!
கவிதைக்கு நீ தான் ஆதாரமே!

பதினொரு வயதில் - பாரதி
பட்டம் பெற்ற நீ
பாஞ்சாலி சபதம் வரை
படைத்துள்ளாய்

நாடு செழிக்கப் பாடிய
நந்தவனமே!
செந்தமிழின் சிம்மாசனமே...!
புதுக்கவிதைகளை
உண்டாக்கினாய்
புதுமைப் பெண்களை
உருவாக்கினாய்

விடுதலைக் கொடுத்திடவே
வழிகளை அமைத்தாயே!
விதிகளை மாற்றிடவே
வரங்களைப் படைத்தாயே!
இளைஞர்களின் எழுச்சி
நாயகனே!

உணர்ச்சிப் பொங்கும்
கவிதைக்கு உரிமையானவனே!
விடுதலைக்கு வித்திட்ட
வித்தகரே!
விமர்சனம் இல்லாத உத்தமரே!
எட்டு மொழிகளைக்
கற்றுக் கொண்டு
எட்டாத உயரம் சென்றவரே!

வறுமையிலும் பெருமையோடு
வாழ்ந்த வான் நிலவே!
சுற்றித் திரியும் சிம்மச்
சொப்பனமே!
இந்த வரிகள்
உனக்கு மட்டுமே

அ. கரோலின் மேரி, இளங்கலைச் சமூகவியல் முதலாமாண்டு
ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி, சென்னை.

## பாரதி

பாரதி… நீ பாரதி இல்லை
இப்பாரதத்தின் தீ!

சுப்பிரமணியனாய் கூறிய
கவிகளைக் கேட்காத செவிகள்!

கருப்பு ஆடை அணிந்து
தமிழ் அன்னையைப் பணிந்து
கவிதைகள் தொடுத்தாய்!

பாரதச் செவிகளுக்குக்
கொடுத்தாய்!

முண்டாசு முறுக்கேற்றி
செந்தமிழ் செருக்கேற்றி
பேனா மையூற்றி
தீட்டிடவே தீ பறக்கும்!

விடுதலையைக் கருவாக்கி
கவிகளைக் கனையாக்கி
மீசையைத் திருகிடவே
எம் பைந்தமிழ் சிறக்கும்!

சிந்தனையை மெருகேற்றி
பதுமைகளை உருவாக்கி
இதழியல் போர் நடத்திடவே
அடிமைத்தனம் இறக்கும்!

பற்பல மொழியறிந்தாய்
பன்னாட்டுக் கலை உணர்ந்தாய்
சாதிகள் களை என எறிந்தாய்
கோவில் யானைக்குக் கவி எழுத
ஏன் மறந்தாய்
இரட்டைக் கால் சிங்கமே!

வறுமையில் விளைந்த தங்கமே!

பேனா முனை கூராகிறது

உன்னைப் பற்றி வரி இயற்ற பாரதமும் நேராகிறது!!!

பா. கோகுல்நாத், இளமறிவியல் கணினி பயன்பாட்டியல்
இரண்டாமாண்டு, நல்லமுத்து கவுண்டர் மகாலிங்கம் கலை
மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்.

## பாரதி கண்ட புதுமை பெண்

பாரதி கண்ட புதுமை பெண்ணாய்
பார்தனில் தடம் பதித்த எண்ணம்
பதின்மத்தின் பந்தாட்டங்கள் வேகம் தடுக்க
பட்டாம்பூச்சியாய் வளைய வந்து அமர்ந்தேன்
எதிர்கால கனவு சிறக்க ஏட்டுக்கல்வியோடு
ஏகாந்தமாய் வாழ்வு மலர வாழ்க்கை
எட்டிப் பிடிக்க எத்தணித்து எழுகிறேன்
எதிர்நிற்கும் எவற்றையும் எத்திப்பறந்திட
நாடும் வீடும் நன்றாய்தான் இருக்கிறது
நாவடங்கி நான் சொற்படி நடக்கையில்
நனிச்சிறப்பு பெற்ற பெண்டிர் நாடெங்கும்

நன்னாள் தானோ இதுவென்றும் குழம்புகிறேன்

பாரெங்கும் தடம் பதித்து படர்கிறாள்
பட்டொளி வீசி படபடத்து மிளிர்கிறாள்
பேசிப் பேசி பின் பேசியவற்றைச்
சுவடின்றி அழிக்கிறாள்
பெண்ணியம் முத்திரையோடு ஒதுங்குகிறாள்!
சமத்துவம் பேசி சவுக்கை சுழற்றினால்
சம பங்கு கொண்டு படைதிரண்டனர் அன்று
சாயம் பூசி பித்தளைக்கு ஈயம் பூசிப்
பின் சாமரம் வீசுகின்றனர்
உண்டாக்கிய காயத்திற்கு இன்று
ஆம் பெண்ணியச் சாயம் – ஒவ்வாமை ஆகிவிட்டது இங்கு
ஆண் எதிர்ப்பு என்பதல்ல – பெண்ணியம்
அவனுக்குச் சம வாழ்வு என்பதே
அதுவன்றி வேறில்லை
ஆக்கமுடன் கடமையும் பொறுப்பும் பற்றி
ஆகச்சிறந்த நல் வாழ்வு யாவர்க்கும் கிட்டட்டும்

பெ.சி. ஐஸ்வரியா, சி.எஸ்.இ கணினி அறிவியல்
எஸ்.ஆர்.எம். வள்ளியம்மை கல்லூரி

## மீண்டும் பிறப்பாய்

அடுப்பூதும் பெண்களுக்கு
படிப்பெதற்கு என்ற
அவநம்பிக்கையை அழித்தவன் நீ!
ஆணுக்குப் பெண் இளைப்பில்லை என்று பாடிய
அறக்கட்டளை அரசன் நீ!

தாய்மொழியாம் தமிழ்மொழி மீது
அளவுகடந்த பற்றுகொண்ட
தன்னிகரற்ற தலைவன் நீ!
தான் எழுதிய கவிதையின் வாயிலாக
புதுநெறியைக் காட்டிய புலவன் நீ!
விடுதலை வேட்கை வெறிகொண்ட
வெற்றி கொண்ட அரசன் நீ!
மக்கள் மனதில் விடுதலை உணர்வை
உரமிட்டு வளர்த்தவன் நீ!
இந்திய நாட்டின் இணையில்லா விடுதலை
போராட்டத்தில் வீறுடன் பங்கும் நாட்டுப்பற்றும் கொண்ட
நல்ல தலைவன் நீ!

குலத்தாழ்ச்சி உயர்ச்சிசொல்லல் பாவம் என
குத்துவிளக்கு ஏற்றியவன் நீ!
இந்நாடு தாழ்வுற்று
விடுதலை தவறி கிடந்த காலத்தில் தன்னிகரற்ற தலைவனாய்
தமிழன்னை கொடுத்த தவப்புதல்வன் நீ!
விடுதலையே உயிர்மூச்சு எனப்பாடிய வீரத்தமிழனே!
ஏனோ எடுத்துவிட்டது இம்மண்
விடுதலைக்கு முன் உன் உயிரை
நீர் பாடியவைகள் எல்லாம் மீண்டும்
பட்டமாய் பறந்திட
பிறந்து வருவாய் இம்மண்ணில்
மகாகவி பாரதியாய்!

க. தல்ஸி, இளமறிவியல் இயற்பியல் இரண்டாமாண்டு
அறிஞர் அண்ணா கல்லூரி, கன்னியாகுமரி.

## பிறந்தநாள் வாழ்த்து

பதினொன்றில் பிறந்து
பாரதியாய் வலம் வந்து
ஐ வயதில் அன்னையை
விட்டு அகன்று
ஏழில் கவிதையை எழுச்சியாக்கி
அக்கவிதையைச் சேறாக்காமல்

செங்கமலமாய் உருவெடுத்த
கவிதையின் திவ்வியத்துவம்
புரிந்து
பாரதி பட்டம் பெற்ற
கார்குழல் கவியே!

நீயே!
சத்தியம்!
ஞானம்!
தர்மம்!

உன் அனுமதி பெற்றே
நடக்கிறது
தமிழ் யுத்தம்
உன் கவியாலே
அணுவும் அசைகிறது நித்தம்

அன்பை இதயத்தில் காட்டி
அறிவைச் செயலில் ஊட்டி
ஆணவத்தைக் காலால் மிதித்து
பதினொன்றில் பிறந்து
பதினொன்றில் மறைந்து
பாரெங்கும் பரந்த
பைந்தமிழ் பாரதிக்கு
என் நெஞ்சார்ந்த
பிறந்தநாள் வாழ்த்துகள்

ல. பூர்ணிமா
இளமறிவியல் கணிதவியல் இரண்டாமாண்டு,
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி) திருநெல்வேலி.

## பாரதி - சாரதி

எட்டையபுர மண்ணிலே பிறந்த வீரத்தமிழனே!
தேசப்பற்று தெய்வப்பற்று
தமிழ்ப்பற்று மானுடப்பற்று
அனைத்தும் கலந்தவரே!

எழுதுகோலின் சக்தியை
உலகறியச் செய்தவரே!

எழுச்சிமிக்க கவிதைகளாலே
சுதந்திர வேட்கையை ஊட்டியவரே!

மீசைக் கவியே மகா கவியே
முண்டாசுக் கவியே
எங்கள் தமிழ்த் தேரின் சாரதியே
எழுதுகோல் கொண்டு வீரம் புகட்டிய வீரத்தமிழனே!

பார் எங்கும் கவிதை நீ
பரவ செய்தாய் கவி பாரதி

கவிஞர்களின் உணர்ச்சி நாடியே!

முறுக்கு மீசையில் கொல்லும் உன் பார்வை...
கவிதை சொல்லும் உன் நேர்மை
எழுந்து வா பாரதத்தில் களைகளைப் பறிக்க!

எஸ். கெஜலட்சுமி, இளம் வணிகவில், இரண்டாமாண்டு
ஸ்ரீ கன்யகா பரமேஸ்வரி கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி,
சென்னை.

## அன்றும்! இன்றும்! என்றும்! பாரதி

எட்டயபுரம் அளித்த எழிலோவியம் நீ
சாதியைத் தகர்த்தெரித்த தீக்கனல் நீ
தமிழ் வளர்ச்சியின் தவப்புதல்வன் நீ
விடுதலை உணர்ச்சியை விதைத்த விவசாயி நீ
எதிர்காலத்தைக் கணிக்கும் கோணங்கி நீ
பெண்களின் சுதந்திரத் தாகத்தைத் தீர்த்த
ஆகாயக் கடல் நீ
அணிகளின் சந்தம் நீ
கவியுலகின் கலைமகன் நீ

முண்டாசுக் கட்டிய முத்தமிழ்க் கவிஞன் நீ
சுயநலமே அறியா தீர்க்கதரிசி நீ
சங்கம் வைத்து வளர்த்த தமிழை – உந்தன்
கவியை வைத்து கவர்ந்த கள்வன் நீ
எம்மிடையே பல் அறிவை வளர்க்க
சிறை சென்ற சிந்தனையாளன் நீ
உன்னால் கவியழகோ!
இல்லை கவியினால் நீயழகோ புரியாத புதிர் நீ!
உந்தன் புகழை நான் கவி பாட
முயல்கிறேன் என்றால் - என் போன்ற
வருங்கால கவிஞருக்கு – அன்றே
புதுக்கவிதைக்கு வித்திட்ட புலமையாளன் நீ!
பாரதி நீயோ இவ்வுலகை விட்டுச் சென்றாய்!
ஆனால் நீ பல மொழிகளைக் கற்றவனாயினும்
உம் தமிழோ உன்னைவிட்டு விலகாமல் நிழல் போல்
அழைத்துச் செல்கின்றன
அன்றும்! இன்றும்! என்றும்!

மு. மோகனப்பிரியா, முதுகலைத் தமிழ் முதலாமாண்டு
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, எடப்பாடி.

## சரித்திரத்தை உருவாக்கிய பாரதி

ஆண்டுகள் ஆயிரம் அதில் நீ ஒரு ஆயுதம்

அச்சத்தின் அம்பு உச்சத்தின் உயிர்

கண்ணில் கண்ணிய பார்வை

கவிதைகளில் கற்பனை நாயகன்

பாட்டுகளில் பாராளும் பரம்பொருள்

எட்டயபுரத்தின் எழுச்சியே கனிவின் கனலே!

முண்டாசு கட்டி மூச்சை மெருகூட்டினாயே

உங்களின் கவிதை வரிகளைப் படித்தால்

துள்ளாத மனமும் துள்ளும் மனதிற்கு மருந்தாகும்

அச்சத்தை அடக்கியாளும்

அறிவால் புலமையாக்கும்

ஆண்டுகள் கடந்தாலும்

ஆளுமை மிக்கது உங்கள் கவிதை

கோடியில் ஒருவன் நீ

எத்தனை எத்தனை தவங்கள் செய்தாரோ

உன்னை இவ்வையகத்தில்

கடவுள் படைத்தார்

விடுதலையிலும் வென்றாய்

பெண்ணுரிமைக்குப் பெரும் பாடுபட்டாய்
தூத்துக்குடியின் துணிவே
எட்டயபுரத்தின் எழுச்சியே
கடலில்வரும் அலைகளும்
உங்கள் கவிதை வரிகளுக்கு
அழகான ஓசை கொடுக்கும்
பா என்றாலும் பாடம் என்றாலும்
உங்கள் அனுமதி இன்றி நுழைய முடியுமோ
நீங்கள் மறைந்து நூற்றாண்டுகள் கடந்தாலும்
மறக்க முடியாத மாய அலைகள்
உங்கள் கவிதை வரிகள்
அற்புதமான கவித்துளிகளும் கவிதை இதழ்களும்
நீங்கள் கதையாக வர்ணித்து விடுவீர்கள்
காலங்கள் அழிந்தாலும் கவி அலைகள்
மனதில் அழிவதில்லை
உங்களுக்கு நிகர் யார்?
கவிதைகளின் களஞ்சியம் நீங்கள் பாரதி...

எம். பிரபா சரஸ்வதி, இளம் வணிகவியல் மூன்றாமாண்டு
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி, திருநெல்வேலி.

## மகாகவி பாரதி

அரை நிலவைச் சுருட்டி
முண்டாசுக் கட்டி!

சாந்தம் தாண்டவம் ஆடும்
நெற்றிப் பொட்டு!

தமிழோடு முறுக்கேறிய மீசை!
ஒளிபடைத்த கண்கள்!

பாட்டுக்கொரு புலவன் நீயே!
கவியுலகத்தின் அரசனும் நீயே!

சாதி கலைந்திட வந்த கவி சோதியே!
மேதினி பாட மறந்திடுமோ உந்தன் துதியே!

பாமரனும் கவி படிக்க
புதுக் கவிதை ஈந்தவனே!
பெண் விடுதலை அதற்கு தடையென்ற
உணர்வைத் தந்தவனே!

பாரதியே, மகாகவியே, கவிராஜனே!
உன் கவியில் நீ வாழ்கிறாய்!
இளைய சமுதாயத்திற்கு நீ எடுத்துகாட்டாகிறாய்!
தமிழ் என்றால் நியாபகம் நீயே!

எழுத்தைக் கொண்டே விடுதலை வகுத்தவனே!
சுயநலம் மறந்த உயர் தியாகியே!

நாட்டுநலம் காத்த செந்தமிழ் தேனே!
காலம் கடந்தாலும் காவியம் களையாது!
என்றும் உன்மீது கொண்ட
காதல் குறையாது!

ஷப்ரின் பானு ஷாஜஹான், இளம் வணிகவியல் முதலாமாண்டு
அரசு மகளிர் கலைக் கல்லூரி, சேலம்.

## மகாகவி பாரதி

குயிலின் இசையைக் குயில்பாட்டாக
கிளிகளின் ஓசையைக் கிளிப்பாட்டாக

கண்ணம்மா மீது கொண்ட காதலை
பாடல் வாயிலாக
கண்ணனை வேண்டுதல் வாயிலாக
பாஞ்சாலி சபதம் பற்றி விரிவாக
பாரத நாடு ஒரு சுதந்திர நாடாக
அச்சம் இல்லை அச்சம் இல்லை என்று
ஒரு குரல்
புதுமைப்பெண் பற்றிப் பெண்களுக்கு
ஒரு குரல்
நம் நாட்டிற்கு முக்கியம் பெண்கள்
ஏனெனில் இவர்கள் நம் நாட்டின்
இரு கண்கள்
அனைவருக்கும் தேவைக் கல்வி
கல்வியை வீண் அடிக்காதே தம்பி
தலையில் பூ அழகாகச்
சூடிக் கொள்வது போல்
புதிய ஆத்திச்சூடியை மனதில் ஏற்றிக்கொள்
நாட்டில் அனைவருக்கும் விடுதலை
விடுதலை கிடைத்த பின் தடையில்லை

தீராத நோய் சாதி

அதை வெறுத்தார் நம் மகாகவி பாரதி

நேர்படப் பேசு

உயிர் வாழ்வதற்குத் தேவை மூச்சு

இன்றுபோல் நாளை இல்லை நாளை

போல் என்றும் இல்லை

அதனால் பறவை போல் பறந்து விரிந்து வாழுங்கள்!

வே. பவித்ரா, இளங்கலைக் குற்றவியல் மற்றும் போலீஸ் நிர்வாகம் இரண்டாமாண்டு

ஸ்ரீ கன்யகா பரமேஸ்வரி கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, சென்னை.

## *பாரதியும் தமிழும்*

அன்னை சொல்லும் அமுதே

ஆசான் அளித்த அறிவே

இன்பம் தரும் எம் மொழியே

ஈசனை உணர்த்தும் உயிரே!

உண்மையை உணரும் உயர்வே

உலகெலாம் பேசும் எம்

மொழியே

ஊமையும் உணரும் எம் தமிழே

எட்டாத உயர்வு தரும் சுவையே!

# நற்றமிழ்க்குடில்

எட்டுத்திக்கும் பரவும் தமிழே
ஏழு செல்வம் தரும் பொருளே
ஐயம் இன்றிப் பேசும் எம்
மொழியே!

ஓலைகள் பல எழுது
ஓதாமல் இருக்காதே
ஔவை கூறிய மொழியே
ஆத்திச்சூடியாம் அவ்வெழுத்தே
ஃ என்னும் ஆய்தம் எம்
மொழியே!
கள்வனும் கலைஞன் ஆக
மாற்றும்
களஞ்சியம் எம் மொழியே

ஞானங்கள் பல தரும் எம்
மொழியே
சான்றுகள் உள்ளது எம் தமிழே!

சான்றோர்கள் பலர்
சொன்ன மொழியே
சாதனை பல புரிந்தவர்கள்
எம் தமிழே!

தானங்கள் பல அளித்த எம்
அரசே
தரணி எல்லாம் புகழ் எம்
மொழியே
அதைப் பாட பாட பார்புகழும்
பெருமையை அடைகிறேன்
தமிழ் வாழ்க! தமிழர் வாழ்க!

சி. ஜெயஸ்ரீ, இளம் வணிகவியல் மூன்றாமாண்டு
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி, திருநெல்வேலி

## மகாகவி பாரதியார்

முண்டாசு கவியே…
கவிதை எழுதாமல் காகிதம் கூட
கரைந்து போகின்றன…
உன் முறுக்கு மீசைக்கும்!
இதய துடிப்பு கூட
விடாமல் துடிக்கிறது
இசையமைக்க எனது
கவிதைக்கு…
தமிழுக்கு ஓர் அர்த்தம்
தமிழனுக்கு ஓர் அர்த்தம்
உன்னைப் பற்றி
நினைக்கையில்!
காதல் என்பது
மகத்துவம் வாய்ந்தது…
பாரதியே ஓர்
உதாரணம் இதற்கு!
பெருமூச்சுவிட்டு திணரல்
ஏற்படும் அளவிற்கு
ஆழ்கடல் போன்றது
அன்பின் மனம்…
திறந்து அரவணைப்பில்
உனது வரிகள்
தண்ணீர் தாகம் தீர்க்கும்
அளவிற்குச் சிந்தனைத் துளிகள்!
கவிதை எழுதாமலே
என் தமிழ் மொழி மீது தாகம்
தாகம் தீர்க்கும் வரையில்
பாரதியே
பற்றுகொண்ட காரணத்தால்
பாசப் பிணைப்பு கலக்கிறது!

மு. அரவிந்த்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பேராவூரணி.

## *அச்சமில்லா கவிமகான்*

தனல் தங்கும் திலகமே
கனல் கொண்ட எழுத்துகளே
எதிரிக்குப் பதில்களாய்
அனல் அருவாய்
கவியுருவிலே…
ழகரத்தை அழகாக்கும்
தலைமகனே பாரதி!
விழா நாயகனின் வருகைக்கு
காத்திருக்கிறோமே
மீண்டும் அவதரிப்பாரோ
தரிசனம்
காணவே…
பெற்ற தாய் போன பின்னே
தமிழ் அன்னை தாலாட்டி
பாலூட்ட
பாரத மாதா மடியில்
விடுதலைக்கு
போராடினாரே…

பால்வெளி கருமை
கருவிழியிலே
பால்நிலா வெண்மை
கருவுறுவிலே
புரிந்தாரே மங்காத
தமிழில் மந்திரமே
பாராத தோற்றம்
கண்டோமே பாரதியாய்…
கவிகளினெழுத்துப் பயணத்தின்
சாரதி பாரதி
நரை கூடா கவிஞராய் மனதிலே
பாமகனை வெற்று காகிதமென
எண்ணியவர்கள்
பட்டமாய் பறக்கையிலே
அண்ணாந்து பார்த்தனரே…

நையிலிலுள்ள கயலையும்
அணலென

பகலாய் துயிலெழுப்புமே
மணல் உண்டு
தீர்த்ததோ இன்னுடலை
உயிர் பின்னி பிணைந்ததோ
வீரத்தமிழோடு…
பிறர் பயனுக்குச் சக்தியிடம்
வேண்டியவரே
பிறழாது வாழ கற்பித்த
உபாத்தியாயரே
காத்திருக்கிறோம் விழாவிற்கு
அழைக்கிறோம்
பாரதி விழாவில் தோன்ற
வேண்டும்

ர. மலர்கொடி, வணிக நிறும செயல்பாட்டுத் துறை
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி, திருநெல்வேலி.

## *கவி கை பாரதி*

நான் வீழ்வேன்
என நினைத்தாயோ?
நா இந்த வரிகளைப்
பகன்றால் போதும்,
அக்கினி சீற்றங்கள்
அகத்துள் மோதும்!
தேன் கவிகள் உன் கவிகள்!
தேகம் சிலிர்க்கும் தீக்கவிகள்!
நான்கு பாடல் இவன் பாடல்
செவிச் சென்றாலே,
நாட்டுப்பற்று நாடியெங்கும்
குதித்து ஓடும்!
எட்டயபுரத்தானவன்!
ஏட்டுக்கவி மன்னனவன்!
சுப்பையா பெயரினவன்!
சிந்து கவி வல்லோனவன்!
பதினொன்று அகவை தனில்
பா புனையும் திறத்தினாலே

பாரதியும் ஆனவனவன்!
எளிய கவி கை எடுத்தான்!
எழுத்தில் வீரம் ஊட்டுவித்தான்!
வெள்ளை நிறப் பூனையாலே
வருணாசுரம் பிரிவுடைத்தான்!
அக்கினிக் குஞ்சொன்றாய்
அவதாரம் எடுத்தவன்!
ஆங்கிலன் விழிகளிலே
எழுத்துப் போர் தொடுத்தவன்!
உன் "அச்சமில்லை
அச்சமில்லை"
இன்றும் உச்சி தொடும்
முழக்கமது!
நல்லதொரு வீணை செய்தாய்
பாக்களால் - அதை
நலங்கெட புழுதியில்
எரிகிறோம் வீணர்களாய்!

பள்ளுப் பாடினாய்
ஆனந்த சுதந்திரம் எண்ணி!
இன்றும் அடிமை தான்
இந்நாட்டு முதலைகளுக்கு!
புதுமைப் பெண் கனவு
கண்டாய்!
புரிதல் இன்றி பாதை மாறும்
காலம் இது!
வாழ்ந்த காலம் நீ கொஞ்சம்
தான்!
வரலாற்றில் புகழோ வானம்
மிஞ்சும் தான்!
ஏனோ தெரியவில்லை!
பாரதிக்குப் பாட்டு எழுதினாலே,
பேனாவும் வடிக்கிறது
வீரத்தமிழ் செங்குருதி!

செ. செல்வகுமார், இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு
திருவெண்ணெய்நல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

## *எட்டாக்கனி*

பாரதி, பாரின் அதிற்சிறந்த கவி,
அவரைப் புகழ்ந்து பாடி
பெருமை கொள்கிறேன் இச்சிறுகவி
எட்டயபுர ஏந்தலுக்கு - கல்வி
எட்டாக்கனியாக இருந்தது
பணப்பற்றாக்குறையால்
எழுதினார் கடிதம் மன்னருக்கு
எடுத்தியம்பினார் தன் கவிகளை உலகிற்கு
பெற்றார் கல்வி - போராடி
பேறு பெற்றார் தன் தொழில் மூலம் கவிபாடி
விடுதலையெனும் விடியலுக்காகக் காத்திருந்தார்
மக்கள் பல கோடி
தன் விவேகமெனும் விந்தையால் கவிவடித்து
விழிப்புணர்வு ஏற்படுத்தினார் மக்களை நாடி
அவர் இருந்தபோது இல்லை
அவருக்கான புகழ் ஆனால்
தற்போது உலகெங்கும்
வெற்றிநடைப் போடுகிறார் என்று சொல்லி திகழ்

காலம் கடந்தும் கண்ணியமாய் வீற்றிருக்கும்
கல்வெட்டுக்களின் எழுத்துகள் போன்றது
அவர்தம் உறுதி…!
ஆண் பெண் என்ற இரு சாதியே
மானுடத்தில் அதைப் புரியாதவர்
வாழ்கிறார் போலி வேடத்தில்
அறிவுக் கண்ணைத் திறந்திடுங்கள் மனிதர்களே
அமுத வாழ்வு காத்திருக்கிறது
நமக்காகக் காணுங்கள்
ஆதாரங்கள் திளைக்கும்படியாய் இருப்பதே
அவர் தம் அறிவுமதி…!
பெண்மைப் போற்றுதும் என்று முழங்குகிறது
அவர்தம் முழக்கம்
புதுமைப் பெண்களைக் குறித்துப் பாடுவதே
அவர்தம் வழக்கம்
சிறந்த பேச்சு நிமிர்ந்த நன்னடை
சிங்காரத் தோற்றம்
சீறிப்பாயும் அவரது கற்பனை
சிறகடிக்கச் செய்தது அவரைக் கவியுலகில்!

என்றும் அணையா விளக்காக இருப்பார் இவ்வுலகில்!
பாரதி, வாழ்ந்த ஆண்டுகளோ சிலவே!
வார்த்தைக் கவிதைகளோ பலவே!
அவரின் அழைப்பிற்காக ஓடிவந்த நிலவே!
அவரை மீண்டும் காண ஆவல் கொண்டுக்
காத்திருப்பது நீ மட்டுமல்ல…

சா. சண்முகப்பிரியா, இளமறிவில் வேதியியல் முதலாமாண்டு
பி.எஸ்.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்.

## மகாகவி பாரதி

மகாகவி பாரதியார் சொன்னார்
எண்ணிய முடிதல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
ரௌத்திரம் பழகு
வீர முழக்கம் செய்த முண்டாசுக் கவிஞன்
அந்நியர் வெள்ளையரை வெளியேற்றுவதற்காக
அறைகூவல் விடுத்த அவர் அக்னிக் கனல்
அக்கினிக் குஞ்சொன்று கண்டு

ஆடி, பள்ளு பாடியவர்

பெண் கல்விக்குப் போராடி

தீண்டாமையை எதிர்த்து

புதுக்கவிதை படைத்து நாட்டுக்கு நல்லவனாய்

வீட்டுக்குத் தீயவனாய்

தமிழுக்கு வல்லவனாய்

வாழ்ந்த அவர்

திண்ணிய நெஞ்சம் வேண்டும்

எதையும் தாங்கும் இதயம் வேண்டும்

மனதில் உறுதி வேண்டும் என்று வலியுறுத்தியவர்

எங்கும் தமிழ் முழக்கம் எழச் செய்த ஏணி

சங்கம் வைத்து வளர்த்த தமிழ் உலக ஞானி

பொங்குதமிழ் புதுமைக்கு வித்திட்ட விஞ்ஞானி

மங்காப் புகழை இவருக்குத்

தந்தவள் கலைவாணி

பாஞ்சாலி சபதத்தில் தர்மத்தை நிலைநாட்டி

பாப்பா பாட்டில் வாழ்வுக்கு வழிகாட்டி

சுதந்திர வேட்கையை நம்முள் ஊட்டி

நல்லதோர் வீணையை நமக்காக மீட்டி

## நற்றமிழ்க்குடில்

செந்தமிழ்த் தேனீயாய்
சிந்துக்குத் தந்தையாய்
பைந்தமிழ்த் தேர்ப்பாகனாய்
பாட்டுக்கொரு புலவனாய்
நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலவாய்
நின்னைச் சரணடைந்தேன் என்று பாடி
ஓய்ந்திருக்காமல் ஓடி
தலைவர்களுடன் கூடி
பள்ளு பாடி
தத்தரிகிட தித்தோம் என ஆடி
நின்று, நடந்து, பறந்து,
சக்தியையும் குயிலையும்
கண்ணனையும் வடிவமைத்து
ரௌத்திரம் பழகு என வீரத்தை விதைத்த
வியத்தகு பாரதியின் வழி
விடியல் சமூகம் படைக்க வாரீர்!

சு. ஜெயசித்ரா, இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி,
சிவகாசி.

## மகாகவி பாரதியார்

இந்திய சுதந்திரத்திற்காகப்

போராடியவர்களின் வரிசையில் நம் காந்தி

இந்திய குடியுரிமை சட்டதிற்காகப்

போராடியவர்களின் வரிசையில் அண்ணல் அம்பேத்கர்

அதேபோல்,

பெண்களின் விடுதலைக்காகப் போராடியவர்களில்

முக்கிய பங்கு வகித்தவர்

நம் அனைவராலும்

கருப்பு காந்தி எனப் பெயர் பெற்ற

பாரதி அவர்களே...

உங்களின் போராட்டத்திற்கு ஈடாக

வேறு எவரும்

பெண்களுக்காகப் போராடவில்லை...

நீங்கள் செய்த போராட்டத்தில்

பெண்களுக்காகச் செய்த போராட்டம் தான்

மிகவும் பிரபலமானது...

நீங்கள் எங்களுடன் இல்லாவிட்டாலும்

நீங்கள் செய்த போராட்டத்திற்குப் பரிசாக

இன்று பெண்கள் நிம்மதியாக

நடமாடி வருகிறார்கள்

நீங்கள் என்றும் பெண்களின் வடிவில்

உயிர் வாழ்ந்து கொண்டு தான் இருப்பீர்கள்…

பெண்களுக்கு அவர்களது தாய், தந்தை

எந்த அளவிற்கு முக்கியமோ

அதே அளவிற்கு,

பாரதியே…! நீங்களும் முக்கியம்

நீங்கள் செய்த தியாகம், அறப்போராட்டம்

இவை அனைத்தும் இன்றும்

பள்ளி, கல்லூரிகளில் போதித்து வருகிறார்கள்…

டிசம்பர் பதினொன்று!

இந்த நாளைப் பாரதி பிறந்த நாளாகக் கருதாமல்

பெண்களுக்குச் சுதந்திரம் கிடைத்த

நாளாக தான் பார்க்கின்றார்கள்….

வாழ்க தமிழ்…! வாழ்க பாரதி…!

நூ.அ. செய்யது இப்ராஹிம், இளம் வணிகவியல் மூன்றாமாண்டு

ஆதித்தனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்செந்தூர்.

## *எழுச்சி நாயகர் பாரதி*

பாரதத் தாயின் அவதாரமே
பாட்டுக்கு நீ தான் ஆதாரமே!
விடுதலைக்கு வித்திட்ட வித்தகரே!
விமர்சனம் இல்லாத உத்தமரே!
புரட்சிக் கருத்துகளை உண்டாக்கினாய்!
புதுமைப் பெண்களை உருவாக்கினாய்!
நாடு செழிக்கப் பாடிய நந்தவனமே
செந்தமிழின் சிம்மாசனமே!
இளைஞர்களின் எழுச்சி நாயகரே!
உணர்ச்சிப் பொங்கும் கவிதைக்கு உரிமையானவரே!
வறுமையிலும் பெருமையோடு
வாழ்ந்த வான்நிலாவே!
பாரதம் போற்றும் பாரதியே
பாட்டுக்கொருப் புலவன் நீ தானே!

இரா. திரிஷா
இளமறிவியல் கணினியியல் முதலாமாண்டு
மகாலட்சுமி பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
சென்னை.

## *பெண்ணின் புன்னகை*

பெண்ணே!
நீ புன்னகைத்துக் கொண்டே
இரு
துன்பமான சூழலிலும்
நகைத்து கொண்டே இரு
புன்னகையினால் பிணி
நீங்குகிறது
உன் புன்னகையை
ஆயுர்வேதத்தில்
சேர்த்தால் இதயங்களுக்கு
நல்ல மருந்தாக இருக்கும்
செடியில் மலரும் மலரைவிட
ஒரு நொடியில் உன் முகத்தில்
மலரும் புன்னகையே
மனதின் மருந்தாகும்
நீ புன்னகைப்பதில்
கஞ்சம் செய்யாதே
புன்னகை ஒரு சிறந்த மருந்து
பெண்ணே உனக்குத் துன்பம்
நேரும் பொழுது
அதைக் கண்டு அஞ்சாதே
புன்னகைத்துக் கொள் அதுவே
உன் துன்பத்தை வெட்டும்
வாளாகி விடும்
பெண்ணின் விடுதலைக்குப்
போராடிய
முண்டாசுக் கவி…

ஆ. சிவப்பிரியா, இளமறிவியல் வேதியியல் மூன்றாமாண்டு
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி, திருநெல்வேலி.

## கவிதையில் வாழும் கவி

என் பாரதி

பெண் அடிமை கூடாதென்றே என்னை

உன் அடிமை செய்த சக்திதாசனே!

அக்னி கவிதைகளை உந்தன்

கை விதைகளாக்கி புரட்சியை

விதைத்த கவிராஜனே!

கற்பனையின் கடைகோடிக்குச் சென்று

சிந்து படைத்த செந்தமிழ் தேனியே!

வாளுக்கே உரிபொருளான புரட்சியை

எழுத்துக்குரியதாக்கிய முண்டாசுக் கவியே!

உன் சிந்தைக் கேட்டேன்

என்னைச் செறிவாக்க

உன் கைவிரல் கேட்டேன்

எனக்கு வழிகாட்ட

உன் உள்ளம் கேட்டேன்

நீங்கா துணிவு கொள்ள

அனைத்தும் காலம் களவு கொண்டதாம்!

இறுதியில் உன் வரிகள் கேட்டேன்

என்னைப் படிக்க
அனைத்தும் காலத்தையே களவுகொண்டது
பாரதியார் கவிதைகள் என்ற பெயரில்...

ந. ஜெயவர்ஷினி, பொறியியல் இரண்டாமாண்டு,
எஸ்.ஆர்.எம் வள்ளியம்மை பொறியியல் கல்லூரி.

## பாரதி

எட்டையபுரம் மண்ணில் பிறந்து
எட்டா உயரம் சென்றார்
உன் கவிதையால்
மன்னனை மயக்கி
பாரதி என்ற பட்டம் பெற்றார்
உன் கவிதைக்கு அன்னைத் தமிழ்
அடிமை அன்றோ!

உன் எழுத்தால் இந்நாட்டை விடுவித்தாய்
பெண்ணிற்கு விடுதலை பெற்றுத்தந்து,
புதுமை பெண்ணாக மாற்றினார்
ஒரு கவிஞராக, எழுத்தாளராக, மொழிபெயர்ப்பாளராக

இன்னும் எத்தனை எத்தனை சிறப்புகள்
சுதந்திரத்திற்காக எரிமலையாய் பொங்கினாய்
உன் எழுத்துகளைத் தீப்பொறிகளாகப் பரப்பினாய்!

வெள்ளையர் பயந்தனர் உன்னைப்
பிடிக்க முயன்றனர்
புலமையைப் பிடிக்க முடியுமா!

புதுவைக்குச் சென்றாய் அங்கும் உன்
எழுத்துகளால் விடுதலைத்
தீயைப் பரப்பினாய்
வெள்ளையன் பயந்தான்
விடுதலைக் கொடுத்தான்
தாய் மண்ணைத் தமிழ் அன்னையால் மீட்டார்
கவிதை உலகில் முடிச்சூடா மன்னனாய்
வளம் வந்து பின் கவிக்கு எல்லாம் தவியாய்
மகாகவியாய் விளங்கினாய் நீ பாரதி…

ர. தனலெட்சுமி, கணிதவியல் இரண்டாம் ஆண்டு
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி), அரியகுளம், திருநெல்வேலி.

# மகாகவி பாரதி

ஏழைகள் வெளிச்சம் காண
எட்டயபுரத்தில் உதித்தது
சூரியன்!
அச்சூரியன் உதித்ததிலிருந்து
மறைவது வரையிலும்
எத்தனைப் பாடுகள்
ஆற்றல் ஏழு வயதிலே கவிஞன்
பதினோரு வயதிலே கவிபாடும்
இரவெல்லாம் இரைச்சலிடும்
இராக்கோழி,
பகல் வந்ததும் பயந்து
பம்முகிறது
பம்முவதும் விம்முவதும்
பாரதி விரும்பா
இருண்மைச் சொற்கள்
அச்சம் தவிர் என்று
பயத்திற்கே பயம் தந்தவன்
நம் முண்டாசுக் கவி
நல்லதோர் வீணை செய்தவன்
நம் பாரதி
பெண் உரிமைக்காகப்
போராடிய
பித்தன் மகாப் பித்தன்
அச்சமில்லை என்று பாடி
நம்மைத் துணிந்து நடக்கச்
செய்தவன்
ஆணாக இருந்து
ஆணாதிக்கத்தை
அடியோடு அழித்தவன்...
நம் பாரதி ஒருவனே!!

ர. பிரியதர்ஷினி, இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு
தி ஸ்டாண்டர்டு பயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி,
சிவகாசி.

## மானுடம் பாடும் பாரதி

மானுடம் பாடும் மகாகவி பாரதி
என்றும் மங்காத தமிழுக்குச் சாரதி
உம் படைப்பில் எத்தனை எத்தனை பாடல்கள்
அனைத்திலும் புதுமைக் கருத்துகளின் தேடல்கள்
எழுத்துக் குண்டுகளைக் கவிதையால் வீசியெறிந்தாய்
எழுதுகோலை ஆயுதமாக்கி
விடுதலை உணர்வை வளர்த்தாய்
பெண்ணடிமை நீங்கி பெருமை பெற்றிட
கவிதையால் துணைநின்றாய்
ஆணாதிக்கத்தை உடைத்தெறிய ஆணும் பெண்ணும் சமம் என்றாய்
அன்னை மொழி சிறக்க அனுதினமும் கவியாரம் தந்தாய்
வசன கவிதைக்கு வாசல் திறந்து
மரபு கவிதைக்கு மணியாரம் படைத்தாய்
மண்ணை, விண்ணைக் காதலை, காளியைப் பாடினாய்
கத்தியின்றி ரத்தமின்றி கவியுலகில் புது யுத்தம் செய்தாய்
முத்தமிழை முண்டாசுக்குள் முடித்து வைத்தாய்
முறுக்கு மீசையாகச் சுதந்திரத்தை
நாளும் முறுக்கிவிட்டாய்

பார்க்கும் இடமெல்லாம்

நந்தலாலாவைக் கண்டாய்

குழந்தைகள் விளையாட படிக்க அறிவுரைகளைத் தந்தாய்

வீழ்வேன் என்று நினைத்தாயோ என்று

அக்னிச் சிறகுகை விரித்தாய்

சூட்சமத்தில் சூழ்ந்து கொண்ட போதிலும்

அச்சமில்லை என்றாய்

நாட்டின் சுதந்திரத்தை நாளும்

நாடியிலே நடமாடவிட்டாய்

கன்னித்தமிழைக் காந்த விழிக்குள் வைத்து

கட்டிக்காத்தாய்

புதுமை பெண்ணுக்கு நிமிர்ந்த நன்னடை

கற்றுக் கொடுத்தாய்

அவர்களை இழிவுப்படுத்திய வீணர்களுக்கு

முற்றுப்புள்ளி வைத்தாய்

மானுடம் பாடும் மகாகவி பாரதி

என்றும் மங்காத தமிழுக்குச் சாரதி!

மா. மீரா, இளமறிவியல் உளவியல் மூன்றாமாண்டு

பூசாகோ அர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோவை.

## இன்றைய பாரதி

காலம் மாறி போச்சு
கண்கள் பொய்யா போச்சு
கருணை குன்றி போச்சு
கடவுள் இல்லனு ஆச்சு
மானுடம் மறைந்து போச்சு
மாயங்கள் நிறைய ஆச்சு
மான் குட்டி போல
திசையெல்லாம் திரிந்தாச்சு
தமிழ் பேசி நாளாச்சு
ஆங்கிலம் அவசியமாச்சு
மொழி இல்லாட்டி நிலமில்லை
நிலமில்லாட்டி இனம் இல்லை
தமிழே விஸ்வரூபம்
எடுப்பாயாக! - உன்
அருமையை உலகிற்கு
எடுத்துக்காட்டுவாயாக!!

க. சங்கவி
ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி, சென்னை.

## மகாகவி பாரதி

செந்தமிழ் இவன் மூச்சுக்காற்று
பைந்தமிழை அமுதென
கண்டவன் இவன்
ஆங்கிலேயக் கொடுங்கோல்
ஆட்சியை
அருந்தமிழ் எழுதுகோலால்
வென்றவன்
மூடநம்பிக்கை கடலில்
மூழ்கியவருக்கு
இவன் கவிதை கலங்கரை
விளக்கு

# நற்றமிழ்க்குடில்

மீண்டும் தமிழனாய்
பிறக்கத் தூண்டும்
இந்தக் கவிஞனின் தமிழ் வழக்கு
இன்றும் தனித்தமிழின்
இளமை மாறாமைக்கு
இந்தத் தனி மனிதனின்
புலமை ஒற்றைக் காரணம்
அவன் இன்றி
தமிழுக்கில்லை பூரணம்
ஆண்டுகள் கடந்தும் புவி ஆளும்
ஒற்றைக் கவி
முத்தமிழ் தாயின் அருமை
தலைமகன்
பாருக்குள் நல்ல நாட்டைக்
கண்டவன்
பாரதி என்பது அவன் திருநாமம்
பாரதத்தின் பறவையும்
அவன் புகழ் பாடும்

உணர்ச்சிகளால் கவிதையைக்
கையாண்ட
தேன்தமிழ் புலவன்

பெருமையைக் காகிதத்தால்
கையாலே இயலுமோ?
இந்த முண்டாசுக் கவிஞனின்
பெருமை எழுத
எழுதுகோலின் மைதான்
போதுமா?
தென்பொதிகைத் தமிழால்
நிலவென்னும் காகிதத்தில்
இந்த இசைத்தமிழ் கவிஞனின்
புகழ் எழுத ஆசைதான்!

ப. இராமவர்த்தினி , இளமறிவியல் வேதியியல் மூன்றாமாண்டு,
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி, திருநெல்வேலி.

# ஆசான்

அறநெறி வழங்கும் ஆசான்
காலக் கோலத்தில் சிறைவாசம்!

ஆழ்துயரின் ஓலக்குரல் கேட்டும்
திக்கற்று நிற்கும் மனிதநேசம்!

இவ்விழிவு நிலையைக் கண்டும்
இயலாமையில் இவ்வுலகே
சேதம்
ஈரமனம் இருந்து மட்டும்
முடவன் தானே உன்வாசம்!

உன்பாதையில் உயர்வு கூட்டும்
ஒருவழியாவது
இருக்கட்டும் கைவசம்!

ஊக்கமாவது துணிவைக்
கொடுக்கட்டும்

வரிகள் தானே
வாழ்வின் தலைக்கவசம்!

என்றாவது உணரும் கட்டம்
வந்துவிடாதோ இந்நிலையின்
மோசம்!

ஏணிப்படியாக என்றும்
இருக்கட்டும்
என் வரிகளின் சுவாசம்!

ஐராவதம் போல்
உயர்வாகட்டும்
வாசிப்புப் பக்கங்கள் இதயவசம்!

ஒன்றாவது நினைவில்
கொள்ளட்டும்

மானிட ஒழுக்கமே
உலகக்கவசம்!

ஓசையாவது எழுப்புங்கள்
திசையெட்டும்

மாற்றம் வேண்டி
நம்பிக்கைவசம்!

ஔடதமாவது ஆசானுக்குக்
கிடைக்கட்டும்
சட்டன் சாதிக்கும் வெற்றிவசம்!

ம. அகிலாண்டேஸ்வரி, ஆசிரியர் பயிற்சி முதலாமாண்டு,
ஞானமணி கல்லூரி, நாமக்கல்.

## பாரதியின் புதுமைப் பெண்

அடுப்பெறித்து அயர்ந்து போன
காலம் மாற்ற போராடிய வீரன்
எல்லாம்
இன்றிருந்தால் என்ன ஆவான்
அட பெண்ணியமே!
இக்கால நிலைமை கண்டு
அடியோடு மடிந்து போவான்...
சக உரிமை உண்டு
என்பதெல்லாம்

உண்மை தான் பெண்ணே!
ஆனால் உன் ஆபாசத்தை
அடக்க
மீண்டும் ஓர் அடக்குமுறை
கண்டு ஆகத்தான் வேண்டும்!
அன்பெனும் ஒருமுகங்கொண்டு
ஆதிக்கந் தகர்த்து
அடக்குமுறை ஒழித்து
ஒதுங்கி நில்லாமல்

ஒடுக்கி ஆளாமல்
ஒற்றைக் குறிலாயினும்
ஓங்கி ஒலிக்குங் குரலது
பெண்டு!
இல்லமே தானாகி
இவ்வுலகிற்கு இலக்கணமாகி
சரிநிகர் சமானம் நாடி
உரிமைக்காகக் குரல்கொடுத்தோடி!

பிறப்பினாலே நுகர்ச்சிப்பல கண்டு
பகுத்தறிவினாலே சிந்திக்கும்
பெண்டு!
பெண்ணே இயம்புவது
பெண்ணியம்!
பெண்ணிற்காக
இயம்பப்பெறுவதும்
பெண்ணியம்!

கு. பூபதிராஜா, இளம் வணிகவியல் தொழில்முறை கணக்கியல்,
ஸ்ரீ கிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்.

## மகாகவி பாரதி

விந்தைகள் செய்திடும் பாட்டிசைத்து
சற்றே சிந்தமைத்தான்
யாப்பமைத்து பொங்கியே
ஆற்றோடு
பாய்ந்திடும் ஓரிலையைப் போல
அலையோடு சாய்ந்திடும்

செந்தமிழ்த் தேன்

பாஞ்சாலியின் ரௌத்திரமும்

தீயின் வெளிப்பாடாய்

கொஞ்சித்தான் பேசிடும்

கோரகையின் – காதலும்

கண்ணனின் மாயமும்

கானமோடு சேர்ந்திடும்

பண்ணோடு சேரும் வழி

சா. யோகேஸ்வரி, முதுகலைத்தமிழ் இரண்டாமாண்டு

சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி

# தமிழ்க் கவிஞன் பாரதி

அக்கினிக் குஞ்சொன்று எடுத்து

அதிலாயிரம் கருவிகள் செய்து

பொந்தின் நடுவிலே பொருத்தி

புகழ்க் கம்பனை நாவிலே சுட்டி

ஏட்டிலே பிரிட்டனை எதிர்த்து

எங்கும் விடுதலை தீயினை

ஆயிரம் கவிகள் செய்தார் – எங்கும்

அணையா விளக்கு ஆனார்!

கோழைக்கும் உண்டு வீரம்

இவனைக் கண்டாலெழும் தேகம்!

அஞ்சாமைக்கு அவன் பாரதி!

விடுதலைத் தேரின் சாரதி

எழுந்தது வரம்

ஏற்றனர் விடுதலை

கவிழ்ந்தது காலனி

காரணம் பாரதி

எட்டுத்திக்கும் புகழ் பரப்பிய

எட்டயபுரத்து புலவன்!

எங்கும் நிறைந்திருக்கும்

எங்கள் தமிழ்க் கவிஞன்!

மு. கோகுலசாமி, முதுகலைத்தமிழ் இரண்டாமாண்டு

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, எடப்பாடி.

## மகாகவி பாரதி

பாரதி என்றொரு சாரதியாம் அவன்

பாரத தேசத்து சாரதியாம் – நீ

விடுதலைக்காகக் கூக்குரலிட்டாய்
மக்கள் மனதில் அச்சத்தை அறுத்தாய்

உன் மீசை முறுக்கில் கம்பீரம் கண்டோம்
உன் கவிதைகளைக் கொண்டு
அகிலத்தை வென்றோம்
பெண்ணடிமைத்தனத்தை
அடியோடு ஒழித்தாய்

புதுமைப் பெண்ணை உலகறியப் படைத்தாய்
தமிழினம் என்றும் தலைநிமிரச் செய்தாய்
ஆயுதம் செய்வோம் ஆலைகள் அமைப்போமென்று
ஆயிரமாயிரம் தொழிலைக் காட்டினாய்

வானையளந்தாய் கடல் மிசை அளந்தாய்
சாதியை ஒழித்தாய் சமநீதியை வகுத்தாய்
நேர்மைக் கொண்டோர் மேலோர் என்றாய்
பாரதி என்கின்ற பட்டம்

உன் கவிக்கு மட்டுமல்ல
உலகை வசப்படுத்தும் உன் சிந்தனைக்கும்

மக்கள் மனதைக் கொள்ளைக் கொண்டவரே
பத்திரிக்கையாளனாய் கவிஞனாய்
சுதந்திரப் போராட்டத் தியாகியாய்
பன்முகம் கொண்டவரே
பார்போற்றும் மகாகவியே
உலகம் உள்ளவரை என்றும்
உன் புகழ் நிலைக்கும்…

மு. வித்யா, முதுகலைத்தமிழ் இரண்டாமாண்டு
சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி

## துயில் கொள் பாரதி

தமிழே சற்று உயிர்த்தெழு!
உன்னைத் தோல் மேல் ஏந்தி
மார்போடு கட்டியணைத்தவனைக்
கௌரவிக்கும் காலம் இது!
காலம் தந்த கவலை பலவாயினும்
தன்னிடமுள்ள தாய்த்தமிழை
ஆயுதமாய் ஏந்தி
விடுதலைக்கு வித்திட்ட மகான்

**முண்டாசுக் கவிஞன் எனில் அது மிகையாகாது!**

எட்டயபுரம் என்னும் ஊரில் பிறந்து
செல்லசாமி லெக்குமி அம்மாளுக்கு
தவபுதல்வனாய் தவழ்ந்து
செல்லமாளை மணந்து
தமிழ் மேல் கொண்ட காதலால்
காடு மேடு நடந்து
காயம் பல கடந்து
இலக்கியத்தினை எடுத்தியம்பிட
பற்பல கவிதைகள் புனைந்து
எட்டப்ப நாயக்கனால் கவிமகள் பொருள்படும்
பாரதி எனப் புகழாரம் பெற்று
சீரிய தோற்றதுடன் சிங்காரமாய் அமர்ந்திருக்கும்
தமிழ்ப் புலவனே எம் கவி பாரதி என்பதைத்
தலை தூக்கி சிரம் உயர்த்தி
தெளிவுபடுத்திக் கொள்கிறேன்
இன்று தமிழுக்குக் கிடைத்திருக்கும்
அங்கீகாரம் மட்டற்ற மகிழ்ச்சியை

மனதில் விதைத்தாலும்

இதற்காகத் தன் வாழ்க்கையை வழங்கிய

வள்ளல் கவிஞன் பாரதி என்பதை

மார்த்தட்டி கம்பீரமாய் குறிப்பிடுவேன்

உன்னைப் போல் ஒருவனும் இல்லையே என்று…

இவ்வுலகம் சற்று மயங்கிடும் நேரமெல்லாம்

உன் கவிதைகள் இம்மக்களைச் சீராட்டி

பாராட்டி வளர்த்தெடுத்திடும்

உடல் இங்கனம் இல்லை எனிலும்

உன் உயிர் தமிழாய் வாழ்கிறது என்பதில்

துயில் கொள் பாரதி!

கு. தமையந்தி

இளமறிவியல் கணிதவியல் இரண்டாமாண்டு,

ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி, திருநெல்வேலி.

# மகாகவியே

மகாகவியே! எங்கள் பாரதியே

நல் படைப்புகளை உலகிற்கு அளித்தவனே

சாதனை பல புரிந்து

பெண் குலத்திற்குப் பெருமை தந்தாய்
இந்தக் கவிஞனைப் போல
வேறுஒரு கவிஞரும் கிடைத்திடுமா
எட்டயபுரத்தில் பிறந்தாயே எங்கள்
தங்கத் தமிழனே!

எட்டயபுர அரசவையால்
பாரதி என்ற பட்டம் பெற்ற கவிஞர் யாரு?
எங்கள் கவிஞர் பாரதியாரு
படைப்பு பல படைத்து
சிறப்பு அனைத்தும் சிறப்பு
அதை எழுதியவர் உருவாக்கியவர்
எங்கள் கவிஞர் இவர்தானே
மகாகவியே! எங்கள் பாரதியே!

பல மொழிகள் அறிந்தவனாம் - இருந்தும்
தமிழே சிறப்பென சொன்னவனாம் – சொல்லி
தமிழைக் காத்து நின்றானாம்

அறிந்தாய் பல அறிந்தாய்
மக்களைச் சேர்த்தாய் ஒன்று சேர்த்தாய்
எட்டுதிசையாவும் கட்டி கவிபாட
வந்த கவிஞர் இவர்தானே…

ச. அஸ்வினி, இளங்கலைச் சமூகவியல் முதலாமாண்டு
ஸ்ரீ கன்யகா பரமேஸ்வரி கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, சென்னை.

# பாரதி

பாரதம் போற்றும் கவிஞன் நீ
பாரதத் தாயின் தவப்புதல்வன் நீ
முண்டாசுக் கட்டிய முழுமதி நீ
முத்தமிழ் போற்றும் பாவலன் நீ

விடுதலைக்காகக் கூக்குரலிட்டாய்
மக்கள் மனதின் அச்சத்தை அறுத்தாய்
உன் மீசை முறுக்கில் கம்பீரம் கண்டோம்
உன் கவிதை கொண்டு அகிலத்தை வென்றோம்

பெண்ணடிமைத்தனத்தை அடியோடு ஒழித்தாய்
புதுமைப் பெண்ணை உலகறியப் படைத்தாய்
தமிழின் புகழைப் பார்போற்ற செய்தாய்
தமிழினம் என்றும் தலைநிமிரச் செய்தாய்
இந்திய தேசத்தை உலகறிய செய்யும்
எண்ணிலடங்கா எத்துணை கற்பனைகள்
காசி நகர்ப்புலவர் பேசும் உரை
காஞ்சியில் கேட்க வேண்டுமெனக் கற்பனை செய்தாய்
ஆயுதம் செய்வோம் ஆலைகள் அமைப்போமென்று
ஆயிரமாயிரம் தொழிலைக் காட்டினாய்
வானையளந்தாய் கடல்மீனை அளந்தாய்
சந்திர மண்டலக் கனவும் கண்டாய்
சாதியை ஒழித்தாய் சமநீதியை வகுத்தாய்
நேர்மைக் கொண்டோர் மேலோர் என்றாய்
பாரதி பட்டம் உன் கவிக்கு மட்டுமல்ல
உலகை வசப்படுத்தும் உன் சிந்தனைக்கும்
உலகம் உள்ளவரை என்றும் உன் புகழ் நிலைக்கும்

ச. முத்து கார்த்திகா, இளம் வணிகவியல் முதலாமாண்டு
ஸ்ரீ சாரதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி

## பாரதி இன்று நீ இருந்தால்?

பாரதி இன்று நீ இருந்தால்? என்பது தலைப்பு
இந்தத் தலைப்பே ஒரு வியப்பு
இன்று இருக்கின்ற பாரதியை இருந்தால்? என வினவுவதால்
ஏற்பட்டுள்ள திகைப்பு
அன்று மட்டுமா? என்றுமே பாரதி நீ
இருப்பாய் நிலைத்து என்பதே என் நினைப்பு!
பாரதி நீ படைத்துள்ள கவிதைகளில்
நீ வாழ்ந்துக் கொண்டிருக்கிறாய்
குயில் பாட்டில் நீ குயிலாகக் கூவிக்கொண்டிருக்கிறாய்
சுயசரிதையில் நீ ஓர் அக்கினிக் குஞ்சு!
பாஞ்சாலி சபதத்தில் நீ படர்ந்தெழும் காட்டுத் தீ
வசனக் கவிதையில் நீ உலவும் தென்றல்
உரைநடையில் நீ ஒலிரும் தென்றல்
இப்படிப் பலவாக வாழ்பவன் நீ
பலமாகவும் வாழ்பவன் நீ
கவிதைச் சட்டங்களைச் சமுதாயத்திற்கு வழங்கிய நீ
கண்ணாடிச் சட்டத்திற்குள் படமாகவும் வாழ்கிறாய்!
சென்னைக் கடற்கரையில் சிலையாகவும் நிற்கிறாய் நீ

இத்தனை வடிவில் நீ இருந்த போதும்
வரிசையில் நின்று ரேசன் பொருட்கள் வாங்கவும்
தேர்தல்களில் வாக்காளனாக வாக்களிக்கவும்
இயலாதவனாக நீ இருக்கிறாய்
சட்டத்தைத் தாண்டும் சராசரி மனிதன் போல்
கண்ணாடிச் சட்டத்தைத் தாண்டி வரும் மனிதன் நீ
மலருடன் பொருந்திய மணம் போல்
விளக்குடன் இணைந்த ஒளி போல்
உடலும் உயிரும் பொருந்த
உலகில் நீ இன்று இருந்தால் என்ன நடக்கும்?
உலகம் நடக்கும்
நீ இல்லாத இப்போது நடக்கும் எல்லாமும்
நீ இருக்கும் போது நடக்கும்
இன்றைய உலக நடப்புகள் கண்டு
நின் உள்ளம் துடிக்கலாம் – வெடிக்கலாம்
பெருமகிழ்வால் களிக்கலாம் பெருமிதத்தில் குளிக்கலாம்
எல்லாம் நடக்கும் என்பதே உண்மை

ம. விகாஷ், இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பேராவூரணி.

# பரிசுபெற்ற மாணவர்கள்

## பேச்சுப் போட்டி

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு | சு.பெ. தமிழமுதன் | இளங்கலைச் சட்டவியல் மூன்றாமாண்டு | ஸ்ரீ வெங்கடேஸ்வரா சட்டக் கல்லூரி, திருப்பதி. |
| இரண்டாம் பரிசு | ஆ. சிவப்பிரியா | இளமறிவியல் வேதியியல் மூன்றாமாண்டு | ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி, திருநெல்வேலி. |
| மூன்றாம் பரிசு | சு. ஹரிபிரியா | இளங்கலைச் சமூகவியல் முதலாமாண்டு | ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி, சென்னை. |

# பாட்டுப் போட்டி

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு | க. தர்ஷினி | இளம் வணிகவியல் முதலாமாண்டு | எத்திராஜ் மகளிர் கல்லூரி, சென்னை. |
| இரண்டாம் பரிசு | வீ. ஹேமவர்த்தினி | முதுகலைத் தமிழ் முதலாமாண்டு | பூ.சா.கோ. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை. |
| மூன்றாம் பரிசு | ர. ஸ்ரீதி | இளம் வணிகவியல் முதலாமாண்டு | எத்திராஜ் மகளிர் கல்லூரி, சென்னை. |
| | ஜீ. ஜெப கிறிஸ்டினா | இளங்கலைத்தமிழ் இரண்டாமாண்டு | அரசு கலை கல்லூரி, சேலம். |

# கவிதைப் போட்டி

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு | இ. முகில் வேந்தன் | இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு | இலயோலா கல்லூரி, சென்னை. |
| இரண்டாம் பரிசு | ச. குரு பிரசாத் | இளங்கலை ஆங்கிலம் இரண்டாமாண்டு | அமெரிக்கன் கல்லூரி, மதுரை. |
| மூன்றாம் பரிசு | க. கௌசிகா | இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு | பாரதியார் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, சேலம். |

# வினாடி வினா

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு | ர. ஜெனிஷா ஃபென் | இளமறிவியல் கணிதவியல் இரண்டாமாண்டு | சாரா டக்கர் கல்லூரி, திருநெல்வேலி. |
| இரண்டாம் பரிசு | மு. கோகுலசாமி | முதுகலைத்தமிழ் இரண்டாமாண்டு | அரசு கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, எடப்பாடி. |
| மூன்றாம் பரிசு | ப. அற்புதலெட்சுமி உஜ்ஜயினி | முதுநிலை அறிவியல் கணிதவியல் இரண்டாமாண்டு | தூய யோவான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருநெல்வேலி. |

## துறை நிகழ்வுகள்





18.10.2022 அன்று துறையில் விதை - 6 மாணவியர் திறன் வளர் பல்கலையரங்க நிகழ்வு நடத்தப்பெற்றது. வேலம்மாள் வித்யாஸ்ரம் சி.பி.எஸ்.இ. பள்ளி, தமிழாசிரியர் திருமதி. ஆ. தனப்பிரியா, சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.




29.09.2022 அன்று விவேகானந்தர் இல்லத்தில் விவேகானந்தர் பண்பாட்டு மையம் நடத்திய வாழ்வியல் விழுமிய பயிலரங்கில் இளங்கலை மற்றும் முதுகலைத்தமிழ் மாணவியர் பங்கேற்று, சான்றிதழ்களைப் பெற்றனர்.

09.12.2022 அன்று கல்லூரிகளுக்கு இடையேனான பாரதியார் விழாப் போட்டிகள் இணைய வழியில் நடத்தப்பெற்றன. 50 கல்லூரிகளிலிருந்து 300 மாணவ, மாணவியர் பங்கேற்றனர்.




14.12.2022 அன்று இணையவழியில் பாரதியார் பிறந்தநாள் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பெற்றது. இவ்விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக மலேசியா சுலுத்தான் இதுரீசு கல்வியியல் பல்கலைக்கழக இணைப் பேராசிரியர் முனைவர் மனோன்மணி தேவி அண்ணாமலை அவர்கள் கலந்துக்கொண்டு சிறப்பித்தார்கள்.




18.12.2022 அன்று இணைய வழி இளைஞர் எழுச்சி நிகழ்ச்சியை யுவ சக்தி அமைப்பு நடத்தியது. இளங்கலை மற்றும் முதுகலைத் தமிழ் பயிலும் மாணவியர் நிகழ்ச்சியில் பங்கேற்றுச் சான்றிதழ்களைப் பெற்றனர்.

30.12.2022 அன்று 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டுத் துறைகளுக்கு இடையே கட்டுரைப் போட்டி நடத்தப்பெற்றது.



முன் பக்க அட்டை வரைபடம்

பா. ஹேம பிரியா

முதலாமாண்டு, நிர்வாகவியல்

# நற்றமிழ்க்குடில்

## தமிழால் தழைக்கும் உலகு

### மாணவ இலக்கியமின்னிதழ்

தமிழ்த்துறை
சோகா தமிழ்ப் பேரவை வெளியீடு
சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.